**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp052026.05
https://ngmtamil.in/

# "Agricultural Life" as Depicted in the Works of Su. Venugopal

**M. Vinoth**[1*], **Dr. R. Govindaraj**[2],
[1]PhD Research Scholar, Department of Tamil, Thiagarajar College, Madurai-09. 2.
[2]Research Guide & Assistant Professor, Department of Tamil, Thiagarajar College, Madurai-09.
[*]Correspondence: vinothmuthurajan007@gmail.com.

**Article Info**
Received on 15-May-2026, Revised on 18-May 2026, Accepted on 20-May-2026, Published on 27-May-2026

## ABSTRACT

Su. Venugopal is a rising writer in modern literature. He documents the decay of rural life following industrialization and globalization, as well as the struggles of people deeply connected to the land. In his stories, farmers invest heavily in agriculture; however, due to the lack of sufficient rainfall, drought, the inability to secure fair prices for their produce, and the proliferation of new technologies, they are pushed into a position where they cannot repay the loans they have taken.
The reader learns through his stories that farmers are forced to sell their land—which they consider their very life—in fragments to repay these debts, eventually becoming landless laborers. To the older generation, agricultural land was viewed as life itself. Su. Venugopal profoundly documents how, in today's climate, agricultural land is merely viewed in terms of square footage. As a solution for farmers facing these changing circumstances, Su. Venugopal proposes methods of managing modern agriculture in many of his stories.

**Keywords**; *Su. Venugopal, Novels, Tamil Literature, Modern literature, Agriculture Life.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# சு.வேணுகோபால் படைப்புகள் உணர்த்தும் “வேளாண்மை வாழ்வியல்”

*[1]**மு. வினோத்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த் துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-09
[2]**முனைவர் ரே. கோவிந்தராஜ்,** நெறியாளர், உதவி பேராசிரியர், தமிழ் துறை,தியாகராசர் கல்லூரி, மதுரை-09

**ஆய்வுச் சுருக்கம்:**

சு.வேணுகோபால் அவர்கள் நவீன இலக்கியத்தில் வளர்ந்து வரும் எழுத்தாளர் ஆவார். இயந்திரமயமாதல் மற்றும் உலகமயமாதலுக்குப் பிந்தைய கிராமிய வாழ்வின் சிதைவுகளையும் நிலத்தோடு பிணைக்கப்பட்ட மனிதர்களின் போராட்டத்தினை பதிவு செய்கின்றார். இவரது கதைகளில் விவசாயிகள் பெரும் முதலீடு செய்து விவசாயம் செய்கின்றனர். ஆனால் போதிய மழையின்மை,வறட்சியின் காரணமாக விளைபொருளுக்குச் சரியான விலை கிடைக்காத காரணங்களாலும் தொழில் நுட்பங்கள் பெருகி வருவதாலும் அவர்கள் வாங்கிய கடனை அடைக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வாங்கிய கடனை அடைக்கத் தங்களது உயிராகக் கருதும் நிலத்தைத் துண்டு துண்டாக விற்பதும் இறுதியில் நிலமற்ற கூலிகளாக மாறுவதும் இவரது கதைகளில் பேசுவதை அறிய முடிகின்றது. பழைய தலைமுறைக்கு விவசாய நிலம் ஒரு உயிராகக் கருதப்பட்டது. இன்றைய சூழலில் விவசாய நிலமானது சதுர அடியாகப் பார்க்கப்படுவதை மிக ஆழமாக இவரது கதைகளில் பதிவு செய்கின்றார். இன்றைய சூழல்களில் மாறிவரும் விவசாயிகளுக்கு தீர்வாக சு.வேணுகோபால் அவர்கள் பலகதைகளில் நவீனத்துவ வேளாண்மையை கையாளும் முறைகளை முன்வைக்கின்றார்.

**முன்னுரை**

சு.வேணுகோபால் அவர்கள் படைப்புகள் நவீன தமிழ் இலக்கியத்தில் வேளாண்மை வாழ்வியலை மிக நுட்பமாகவும் அதன் வலிகளையும் அப்படியே பதிவு செய்கிறார். தொழில் நுட்பங்கள் பெருகி வருவதால் விவசாயிகள் கிணறு வெட்டுவதும்,தண்ணீர் வற்றிப்போவதும்,ஆழ்துளைக் கிணறுகள் விவசாயிகளின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் பொருளாதாரச் சரிவையும் இவரது படைப்புகளில் காணலாகிறது. இவரது கதைகளில் நிலம் என்பது வெறும்மண் அல்ல, அது ஒரு கதாபாத்திரம் ஆகும். இவர் விவசாய நிலங்களை கைவிட்டுவிட்டுப் பிழைப்புக்காக நகரங்களுக்குக் கூலி வேலைக்குச் செல்லும் மனிதர்களின் வலியையும் நிலத்தில் உள்ள பயிர்களை அழிக்கும் போது அப்பயிர்கள் வருந்திப் பேசுவதாகவும் இவரது படைப்புகளில் வெளிப்படுகின்றன. என தேனி வட்டாரத்தில் வாழும் விவசாயிகளின் வேளாண்மை வாழ்வியலை எடுத்துரைக்கும் நோக்கில் இவ்வாய்வு அமைகின்றது.

**சு.வேணுகோபால் அறிமுகம்**

சமகால எழுத்தாளர்களில் வளர்ந்து வரும் எழுத்தாளர் சு. வேணுகோபால் ஆவார். இவர் தேனி மாவட்டத்திலுள்ள அம்மாபட்டி என்னும் கிராமத்தில் ந.சுருளி வேல்,பொண்ணுத்தாயி இணையருக்கு மே 20,1967-ல் பிறந்தார். விவசாயக் குடும்பப் பின்னணியில் பிறந்த இவர் இவரது

படைப்புகள் பெரும்பாலும் கிராமப்புற விவசாயத்தைச் சார்ந்தும் மண்ணுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவுகளையும் அவர்களின் கண்ணீர் கதறல்களையும் எடுத்துரைக்கின்றார். இவர் சிறுகதை,நாவல், குறுநாவல்,விமர்சனக் கட்டுரைகள் எழுதி வருகின்றார்.

நவீனகால சூழல்கள் விவசாயத்தில் திணிக்கப்படுவதால் பாரம்பரிய விதைகள் பாதிப்படைவதையும் மண்வளம் குன்றுவதையும் மிக ஆழமாகச் சுட்டிக்காட்டுகின்றார். நவீன தொழில்நுட்பங்கள் விவசாய நிலங்களில் பெருகி வருவதால் நிலம் மற்றும் நீர் பாதிப்படைவதால் இதனால் பயிர்கள் பாதிப்படைவதையும் தொழில்நுட்பக் கருவி விவசாயத்தில் பெருகி வருவதாலும்,கால்நடை வளர்ப்புகள் குறைவதும் இவரது படைப்புகளில் பெரும்பாலும் எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது. இவர் படைப்புகளில் தேனி,மதுரை,கொங்கு வட்டார பேச்சு வழக்குகளும் அந்த மண்ணின் மணமும்,வலியும் இவரது படைப்புகளில் அப்படியே வெளிப்படுகின்றன. இவர் மண்ணின் மொழியை வெறும் அலங்காரத்திற்காகப் பயன்படுத்தாமல்,அதுவே கதாபாத்திரங்களின் ஆன்மாவாக இருக்கும்படி கையாள்கின்றார். கிராமப்புற மக்களின் உரையாடல்களில் இயல்பாக வந்து விழும் பழமொழிகளை அப்படியே பயன்படுத்துகிறார்.

### தேனி வட்டாரமும் நிலமும்

சு.வேணுகோபால் படைப்புகளில் நிலம் என்பது வெறும் மண் மட்டுமல்ல. அது ஒரு பண்பாடு,வாழ்வாதாரம் மற்றும் உணர்வுப்பூர்வமான பிணைப்பு ஆகும்.தேனி வட்டார விவசாயப் பின்னணியில் வாழ்ந்த இவர் தனது படைப்புகளில் மண்ணின் மணத்தையும் விவசாயிகளின் போராட்ட நிலைகளையும் அவ்வட்டாரத்தின் வழக்குசொற்களையும் அதன் நடைமுறைகளையும் வாசகர்களுக்கு ஏற்றவாறு எழுதுவதில் கைசிறந்தவர் ஆவார். கதையில் காணப்படும் கதாபாத்திரங்கள் பேசும் போது இலக்கணத் தமிழைத் தவிர்த்து, “என்னப்பா பண்ணுற?”என்பதற்கு பதில் அந்தந்த ஊருக்கே உரிய ஒலியுடன் கூடிய சொற்களைப் பயன்படுத்துகிறார். நவீன மாற்றங்களால் விவசாயம் எதிர்கொள்ளும் சவால்கள்,நிலமற்ற கூலிகளின் துயரம் மற்றும் நிலம் வைத்திருப்பவர்களின் வர்க்கப் போராட்டங்களை மிகத் துல்லியமாகப் பதிவு செய்கிறார்.

விவசாய நிலங்கள் குடியிருப்புக் பகுதிகளாக மாற்றப்படுவதையும், அதனால் நிலத்தோடு இருந்த பந்தம் அறுந்து போவதையும்,அவர் ஒரு பெரும் துயரமாகப் பதிவு செய்கிறார். இது விவசாயிகளின் இடப்பெயர்வு மற்றும் வாழ்வாதார இழப்பை அழுத்தமாகப் பேசுகிறது.

### நவீன தொழில்நுட்பத்தால் ஏற்படும் வேளாண்மை பாதிப்பு

சு.வேணுகோபால் படைப்புகளில் நிலம் பாதிப்பு என்பது நவீன தொழில்நுட்பங்கள் ஊடுருவுவதாலும் மண் பாதிப்பு,நீர் பற்றாக்குறை, நிலங்கள் பாதிப்படைவதையும் விவசாயிகளின் கண்ணீர் கதறல்களையும் நிலங்கள் வருந்திப் பேசுவதாகவும் சுற்றுப்புறச் சூழல்கள் பாதிப்படைவதையும் அறிய முடிகின்றது. நவீன விவசாயத் தொழில்நுட்பங்கள்,இயந்திரமயமாதல் மற்றும் வணிக ரீதியான பயிர்ச் செய்கை முறைகள் நிலத்தை ஒரு ‘உற்பத்திப் பொருளாக’ மட்டுமே பார்க்கத் தூண்டுகின்றன. ரசாயன உரங்கள் மற்றும் இயந்திரங்களின் அதிகப்படியான பயன்பாடு,மண்ணின் இயல்பான உயிர்ப்பையும் அதன் செழுமையையும் சிதைக்கின்றன என்பதை இவரது சிறுகதை நாவல்கள் உணர்த்துவதைக் காணலாகிறது.

குறிப்பாக ‘உயிர்ச் சுனை’ என்ற சிறுகதையில் விவசாய நிலத்தில் கோககோலா என்ற கம்பெனிகள் ஊடுருவலால் கண்ணப்பர் என்ற விவசாயி கிணற்றில் போர் போட்டும் தண்ணீர் வராமல் அந்த விவசாயி வருந்திய நிலைமைகளை இக்கதையில் எடுத்துரைக்கின்றார்.

“ஓராண்டுக்கு முன் ஒரு மாத இடைவெளியில் டக்டக் கென்று தண்ணீர் கீழிறங்கி வறண்டு விட்டது. திரிவேணி ஓடைக்கு வடக்கால் கோக கோலா கம்பெனி வந்த பிறகுதான் சுத்து வட்டாரக் கிணறுகள் எல்லாம் காய்ந்து போய்விட்டன. கிணற்றின் ஓரத்தில் உள்ள ஏழு தென்னை மரங்களில் இரண்டு மொட்டையாக நிற்கின்றன. நடுமரத்து குருத்து முறிந்து தொங்கிக் கொண்டிருக்கிறது. வரப்போரம் இருக்கும் தென்னை மரக்குருத்து வதங்கி லேசாகச் சாயத் தொடங்கிவிட்டது. மரங்கள் ஒரு நொடியில் காணாமல் போனால் கூட பரவாயில்லை. கண்ணெதிரே சிறுகச் சிறுக சரிவில் துடிப்பதை தினம் தினம் பார்த்துத் தொலைப்பதுதான் வேதனை.”[1]

அந்த கண்ணப்பர் விவசாயி நவீன தொழில் நுட்பத்தால் விவசாயம் அழிவதை அவர் வருந்திப் பேசுவதாக இக்கதையானது அமைகின்றது. எனவே நவீன சூழல்கள் மாற்றத்தால் விவசாய நிலங்களில் தொழில் நுட்பங்கள் ஊடுருவுவதால் ஏற்படும் நிலப் பாதிப்பு நீர் பற்றாக்குறை ஏற்படுதல் விவசாயம் அழிந்து வருவதையும் சு.வேணுகோபால் தனது படைப்புகளில் எடுத்துரைக்கின்றார்.

**விவசாயிகளின் கடன்சுமை**

சு.வேணுகோபால் படைப்புகளில் விவசாயிகளின் கடன் சுமை என்பது வெறும் பொருளாதாரத் தரவாக இல்லாமல்,ஒரு வாழ்வியல் துயரமாக,குடும்பங்களின் சிதைவாகச் சித்தரிக்கப்படுகிறது. இயற்கைச் சீற்றங்களாலும்,சந்தை விலை வீழ்ச்சியாலும் பாதிக்கப்படும்போது, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போவது விவசாயியை ஒரு சமூக அவமானமாக உணர வைக்கிறது. இந்த அவமானம் அவர்களைத் தற்கொலை என்ற இறுதிக் கட்டத்திற்கு இட்டுச் செல்வதை இவரது கதைகள் நுணுக்கமாகப் பதிவு செய்கின்றார்.

விவசாயி ஒரு வெள்ளாமை ஏமாற்றினாலும்,ஒரு வெள்ளாமை விளையும் என்று நினைத்து கடன் வாங்கி மிகுந்த எதிர்பார்ப்போடு விவசாயம் செய்கின்றான். ஆனால் அவன் எதிர்பார்ப்பில் மிகப்பெரிய இடியே விழுந்தது போன்ற விவசாயம் போட்ட மொதலை எடுக்க முடியாத அளவிற்கு மண்ணோடு மண்ணாகி விட்டது. என்பதை ‘கண்ணிகள்’ என்ற நாவலின் வழியாக உணர்த்துவதைக் காணலாகிறது.

“30 ஆயிரம் கட்டி ஈசான மூலையில் புதுசர்வீஸ் வாங்கினார். கனரா பேங்கிற்கு நடையாக நடந்து போர்வெல் மோட்டார் சகிதத்திற்கு ஒன்றரைலட்சம் கடன் வாங்கினார். இருப்பத்தஞ்சுக்கு இருப்பத்தஞ்சடி இடைவெளி விட்டு குழிகள் வெட்டப்பட்டன. மூன்று ட்ராக்டர்கள் குழிகளுக்கு ஆத்து மணல் கொண்டுவந்தன.வேலை ஜரூராக நடந்தது. பெரியகுளம் விதைப் பண்ணையிலிருந்து 950 தென்னங்கன்றுகள் டிராக்டர்களில் வந்திறங்கின. வேளாண்மை அதிகாரி சொன்னபடியெல்லாம் மருந்து தெளித்துப் பார்த்தார். நோவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தோப்பில் எந்த ஒரு வருமானமும் இல்லை. தண்ணீர் பாய்ச்சும் கூலிகூட இல்லை. நிழலடியில் எதுவும் வராது. எந்த வெள்ளாமையையும் செய்ய முடியாமல் மூன்றாண்டுகள் காத்திருந்து இந்த இரண்டாண்டுகள் தோப்பில் எந்தப் பயனும் இல்லாமல் ஊட்டியை ஒடித்துவிட்டது. ஒன்றரை வருஷமாக கனரா பேங்காரனுக்கு வட்டி நிலுவை ஏறிக் கொண்டிருந்தது. 50 ஆயிரத்துக்கு மாதம் ஐந்தாயிரம் வட்டி

அதிகம் தான். முதல் மாதம் வட்டியை எடுத்துக் கொண்டு தந்தார்கள். முதல் மாதம் முடியும் முன்னே நான்கு பேரோடு வந்தான். தேவாரரத்தான் பிடித்த பிடியில் பார்ட்னர்கள் பிரச்சினை என்று பணத்தைக் கட்டச் சொல்லி நெருக்க ஆரம்பித்தான்."[2]

சூழலியல் காரணங்கள் மற்றும் பருவ காலம் பொய்த்ததாலும் வறட்சி ஏற்பட்டதால் அந்த விவசாயி வங்கி மற்றும் கந்துவட்டிக் காரர்களிடம் வட்டிக்கு கடன் வாங்கி அதை கட்ட முடியாமல் அந்த விவசாயின் வாழ்வியல் சிக்கல்களை சு.வேணுகோபால் அவர்கள் இந்நாவலில் சுட்டிக்காட்டுவதை அறிய முடிகிறது.

எனவே சு.வேணுகோபால் கதைகளில் வரும் விவசாயிகள் பெரும்பாலும் நிலத்தையும் மண்ணையும் உயிராகக் கருதுபவர்கள். ஆனால் பருவமழை பொய்த்தல் மற்றும் விளைபொருட்களின் விலை உயர்வு அவர்களைக் கடன் வலைக்குள் தள்ளும் சிக்கல்களை இறுகின்றனர். வாங்கிய கடனுக்காகத் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்த நிலத்தைத் தாரைவார்க்கும் வலி இவரது கதைகளில் பிரதிபலிக்கின்றது.

**இன்றைய சூழலும் விவசாயமும்**

பழைய தலைமுறை விவசாயிகளுக்கு நிலம் என்பது ஒரு அடையாளம் ஆகும். சு.வேணுகோபால் படைப்புகளின் இன்றைய சூழலில் விவசாய நிலங்களை ஆக்கிரமிப்பதும் தொழில் நுட்பங்கள் பெருகிவருவதும் விவசாய நிலங்களில் நகரமயமாகப் பெருகிவருவது போன்ற விவசாயத்தின் சிக்கல்களை இவரது படைப்புகளில் ஆழமாக சித்தரிக்கின்றார். இன்றைய சூழலில் விவசாயம் சந்திக்கும் நெருக்கடிகளை இவரது படைப்புகளில் காண முடிகின்றது. விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் சிறு விவசாயிகளும் தங்கள் நிலத்தை இழந்து விட்டு சூழலியல் காரணங்களால் மற்ற நகரத்தை நோக்கிச் செல்வதையும் அவ்விவசாயிகளின் கண்ணீர் கதறல்களையும் இவர் கதைகளில் பதிவு செய்கின்றார். தொழில்நுட்பக் கருவிகள் விவசாயத்தில் பெருகி வருவதால் கூலிப் பற்றாக்குறை,கால்நடை வளர்ப்பு குறைவு,பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழ்வாதாரம் பாதிப்பு என இவர் சூழலியல் காரணங்களை எடுத்துரைக்கின்றார்.

விவசாயத்தில் கால்நடை வளர்ப்பு என்பது ஒன்றிப் பிணைந்த பிரிக்க முடியாத ஒன்றாகும். இன்றைய நவீனகால சூழலில் இயந்திரக் கருவிகள் வளர்ந்து வருவதால் கால்நடைகள் வெறும் இறைச்சிக்காகவும்,பாலுக்காகவும் மட்டுமே வளர்க்கப்படும் இயந்திரங்களாக மாறிவிட்டன. ஏர் பிடிப்பது மறைந்து டிராக்டர்கள் வந்த பிறகு,விவசாயிகளுக்கும் மாடுகளுக்குமான அந்த உணர்வுப்பூர்வமான பிணைப்புச் சிதைந்துவிட்டதை சு.வேணுகோபால் வருத்தத்துடன் பதிவு செய்கிறார். உதாரணமாக,"குதிரை மசால் தாத்தா"என்ற சிறுகதையில் உணர்த்துவதை அறிய முடிகின்றது.

"முன்பெல்லாம் ஒரு கிராமத்தில் முப்பது ஜோடி மாடுகள் வரை இருக்கும். இப்போது காளை மாடுகள் வைத்திருப்பதே அபூர்வமாகிவிட்டது. விவசாய யந்திரங்கள் நுழைந்து ஆக்கிரமித்துக் கொண்டன."[3]

என இக்கதையின் வழியாக கால்நடை வளர்ப்பு அழிந்து வருவதைக் கூறுகின்றார்.

சு.வேணுகோபால் படைப்புகள் நகரமயமாதலால் விவசாய நிலங்கள் சிதைந்து வருவதையும் அதனால் ஏற்படும் வாழ்வாதார மாற்றங்களையும் மிகத் துல்லியமாகப் பதிவு செய்கின்றார்.

நமது முன்னோர் காலக்கட்டத்தில் விவசாயம் என்பது வாழ்வாதாரமாகவும் பண்பாடாகவும் காணப்பட்டது. இக்கால சூழலில் விவசாய நிலங்களை அழித்தும் நகரமயமாவதும் தொழில்நுட்பங்கள் பெருகி வருவதாகவும் சு.வேணுகோபால் அவர்களின் ‘உற்பத்தி’ என்ற சிறுகதையின் வழியாக எடுத்தாளப்படுவதைக் காண முடிகின்றது. சொந்த நிலத்தில் ‘பண்ணாடி’யாக வாழ்ந்தவர்கள்,நகரத்தில் ஒரு இயந்திரத்தின் முன் அடையாளம் தெரியாத தொழிலாளியாக மாறும் வலியை இவரது படைப்புகள் பேசுகின்றன.

“ஜக்கி மாமா தோட்டத்தை மையமாக வைத்து அந்த பரவு முழுசை கோயம்புத்தூர் கம்பெனி வெளிநாட்டுக் கம்பெனியோடு கூட்டாக வாங்கியது. 150 ஏக்கர் நிலப்பரப்பளவு என்று பெயர்ப் பலகை அறிவித்துக் கொண்டு இருக்கிறது. இப்போது கரும்பு வெளஞ்ச மேட்டுப் பரப்பு முழுசும் கட்டடங்கள்,கூடாரங்கள்.”[4]

வறுமை சூழல் காரணங்களால் விவசாயிகள் நிலத்தை விற்பதாலும் அந்நிலத்தில் தொழில்நுட்பங்கள் பெருகிவருவதாலும் கட்டிடங்களும் வீடுகளும் வளர்ந்து வருவதாலும் பயிர்கள் பாதிப்படைவதையும் சுற்றுப்புறச் சூழல் சீர்குலைவதையும் இக்கதையில் அறியலாகின்றது. எனவே சு.வேணுகோபால் அவர்களின் படைப்புகளில் இன்றைய சூழல் காரணங்களால் விவசாயம் அழிவதையும் அதனால் ஏற்படும் விவசாயிகளின் பாதிப்புகளையும் அவர்களின் வாழ்வியல் போராட்டங்களையும் எடுத்துரைக்கின்றார்.

**சு.வேணுகோபால் முன்வைக்கும் தீர்வுகள்**

சு.வேணுகோபால் தனது படைப்புகள் வாயிலாக நவீன இயந்திரமயமாக்கப்பட்ட உலகில் நசுங்கிப்போகும் வேளாண்மை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க சில முக்கியமான தீர்வுகளை முன்வைக்கிறார். இவர் இக்கால சூழலுக்கு ஏற்றவாறு விவசாயம் பாதிப்படைவதையும் அதற்கு தீர்வாக நவீன வேளாண்மைகளை கையாளுவதை ஒரு தீர்வாக கொண்டு செல்கின்றார். குறிப்பாக ‘மண்ணைத் தின்றவன்’ என்ற சிறுகதையில் ஒரு பட்டதாரி இளைஞன் அவனது கிராமத்தில் விவசாய நிலங்களில் நவீனத்துவ வேளாண்மை செய்து வாழ்ந்ததை விவசாயத்தில் ஒரு தீர்வாகக் கொண்டு செல்கின்றார்.

“பருத்திருந்த ராசா வாய்க்கால், முருக வாய்க்கால், கைவாய்க்கால் ஊடுகரையெல்லாம் ரெண்டு வரிசையாக மிச்சமில்லாமல் நட வைத்தேன். பருத்தியைக் கலக்க நட்டால்தான் ஆக்கைகளில் காய் கட்டும். வெங்காயத்திற்கு நெருக்கம் முக்கியம்.”[5] என பட்டதாரி இளைஞர் நவீனத்துவ வேளாண்மையை கையாளுவதைப் பற்றிக் கூறுகின்றார்.

‘நிலம் எனும் நல்லாள்’ என்ற நாவலின் வழியாக குமரன் என்ற கதாபாத்திரமானவன் அக்கிராமத்தில் விவசாய நிலங்களின் வறட்சியை அறிந்து நவீன மாற்றங்களுக்கு ஏற்றவாறு விவசாயத்தைக் கையாளுவதை எடுத்துரைக்கின்றார்.

“அந்தப் பரவு தோட்டக்காரர்கள் அப்படியப்படியே வரப்பு வழியாக வந்து குமரனோடு பேசிவிட்டுப் போவார்கள். ஏழெட்டாண்டுகளாக வாய்க்காத மிளகாய் மகசூலை என்னமோ செய்து கொண்டு வந்து நிறுத்திவிட்டானே என்று ஆச்சரியப்பட்டார்கள். ‘மண்ணுல முன்ன மாதிரி சத்தில்லப்பா. நிலம் கரடு தட்டிப் போச்சு’ என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களிடையே குமரன் புகுந்து சூழ்நிலையைப்

புரிந்து கொஞ்சம் மாற்றி வைத்த வெள்ளாமை சரியாக அமைந்துவிட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாக மிளகாய் பூ வெடுத்ததோ இல்லையோ ஓரே வாரத்தில் பாத்திக்கு இரண்டு அகத்திப் பாச்சிகளை மட்டும் விட்டு விட்டு மற்றதை சுத்தமாக அறுப்புக்குவிட்டான். பத்துப் பேர் பால் மாடுகளுக்குக் கூட்டமாகச் சேர்ந்து ஒரு பக்கமிருந்தே அறுத்துக் காலியாக்கினார்கள். ஆட்டுரம் வாங்கிய பணத்திற்குத் தீவனமாக அகத்தியை விற்று ஈடு கட்டினான்."[6]

குமரன் என்ற விவசாயி அக்கிராமத்தில் வறட்சியான நிலையிலும் அம்மண்ணின் தரத்தை அறிந்தும் அவனது நிலத்தில் செழுமையான விவசாயத்தைச் செய்து காட்டியதாகவும் நவீன வேளாண்மையைக் கையாண்ட அவன் அதற்கு ஈடாகவும் லாபம் செய்த விதத்தையும் வாழ்ந்த அவனது சிறப்பினை வேளாண்மை வாழ்வாதாரத்தின் தீர்வாக இந்நாவலில் குறிப்பிடுகின்றார். எனவே சு.வேணுகோபால் அவர்கள் இக்கால நவீன தொழில்நுட்ப சூழல்களுக்கு ஏற்றவாறு விவசாயம் பாதிப்படைந்து வருவதை அவர்தம் கதைகளின் வழியாக கூறினாலும் அதனை கையாளும் நோக்கில் விவசாயிகள் வேளாண்மையினைச் செய்து வாழ்ந்து வந்ததை எடுத்துரைக்கின்றார்.

**முடிவுரை**

சு.வேணுகோபால் படைப்புகள் பெரும்பாலாக இன்றைய சூழலில் மாறி வரும் தொழில்நுட்பக் காரணங்களால் விவசாய நிலங்களும் விவசாயிகளும் பாதிப்படைவதைக் கூறுகின்றது. மழை,வறட்சி, கால்நடைகள் மற்றும் மண் பாதிப்பு போன்ற சூழலியல் காரணங்களால் விவசாயிகளின் கடன் சுமைகளும் இவரது கதைகளில் பேசப்படுகின்றது. வேளாண்மையில் இயந்திரங்கள் பெருகி வருவதால் பாரம்பரியமான விவசாயமும் விதை உரம் நிலம் பாதிப்படைவதை ஆழமாக பதிவு செய்கின்றார். விவசாயம் நலிவடைவது,பருவமழை பொய்த்தல் மற்றும் கடன் சுமை ஆகிய காரணங்களால் விவசாயிகள் தற்கொலைக்கோ அல்லது இடப்பெயர்வுக்கோ தள்ளப்படுகின்றனர் என்பதனை இவரது படைப்புகளில் அழுத்தமாகப் பதிவு செய்கின்றார். விவசாயிகள் தங்கள் முன்னோர்களிடமிருந்து பெற்ற நிலம் சார்ந்த நுட்பமான அறிவை கைவிடக் கூடாது என்பதை அவர் கதைகள் உணர்த்துகின்றன. அதே சமயம்,தற்காலச் சூழலுக்கு ஏற்ப சொட்டு நீர்ப் பாசனம் போன்ற நவீனத் தொழில் நுட்பங்களை முறையான புரிதலுடன் கையாள்வதை சு. வேணுகோபால் முன்வைக்கும் தீர்வுகளை இக்கட்டுரையானது எடுத்தாளப்படுகிறது.

**அடிக்குறிப்புகள்**

[1]. உயிர்ச்சுனை சிறுகதை,ப,10
[2]. கண்ணிகள் குறுநாவல்,பக்.9,10,11
[3]. குதிரை மசால் தாத்தா சிறுகதை,ப,32
[4]. உற்பத்தி சிறுகதை,ப,32
[5]. மண்ணைத் தின்றவன் சிறுகதை,ப,8
[6]. நிலம் எனும் நல்லாள் நாவல்,பக்,23,24

**துணை நூற்பட்டியல்**

**[1].** வேணுகோபால்சு.,உயிர்ச்சுனை சிறுகதை.,தமிழினி பதிப்பகம்., மூன்றாம் பதிப்பு 2017., சென்னை–51.

[2]. வேணுகோபால்சு.,கண்ணிகள் குறுநாவல்.,தமிழினி பதிப்பகம்., இரண்டாம் பதிப்பு 2021., சென்னை–51.

[3]. வேணுகோபால்சு.,குதிரை மசால் தாத்தா சிறுகதை.,தமிழினி பதிப்பகம்.,மூன்றாம் பதிப்பு 2017., சென்னை–51.

[4]. வேணுகோபால்சு.,உற்பத்தி சிறுகதை.,தமிழினி பதிப்பகம்.,மூன்றாம் பதிப்பு 2021., சென்னை–51.

[5]. வேணுகோபால்சு.,மண்ணைத் தின்றவன் சிறுகதை.,தமிழினி பதிப்பகம்., இரண்டாம் பதிப்பு 2012., சென்னை–51.

[6]. வேணுகோபால்சு.,நிலம் எனும் நல்லாள் நாவல்.,தமிழினி பதிப்பகம்., இரண்டாம் பதிப்பு 2019., சென்னை–51.

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026 